International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கண்மணி குணசேகரன் சிறுகதைகளில் கதைமாந்தர்களும் கதைக்கருவும்

**தே. பிரியங்கா**
சுழல்எண்- 2225120002, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் தெ. மேகநாதன்**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் நெறியாளர் தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்-603 002

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ் எழுத்தாளர்களின் வரிசையில் கண்மணி குணசேகரன் அவர்கள் தலைச்சிறந்த எழுத்தாளராக அறியப்படுகின்றார். அவர் அடித்தளமக்களின் குடும்ப சூழல்களையும், பொருளாதார பிரச்சனைகளையும், குடும்ப உறவுநிலையில் ஏற்படும் போராட்டங்களையும் கண்முன்னே காட்சிப்படுத்தும் ஆகச்சிறந்த எழுத்தாளர் ஆவர். கவிஞராக படைப்புலகில் அறிமுகமாகி சிறுகதைகள், நாவல் என தன் படைப்புக்களத்தை விரிவாக்கிக் கொண்டவர். பெண்களையும் அவர்களைச் சுரண்டிப் பிழைப்பவர்களையும் நுட்பமான கதாபாத்திரங்கள் மூலம் தமது கதைகளில் சித்தரித்ததுக் காட்டுபவர். சமூகத்தில் பெண்கள்படும் அவலங்களையும், அவர்கள் எதிர்கொள்ளும், பிரச்சனைகளையும் பேசுவதால் இவர் வாசகர் மனதில் நீங்க இடம் பிடித்தவர். 'நம் வரலாற்றை நாம் எழுதா விட்டால் வேறு எவராவது வந்து தவறாக எழுதிவிடக் கூடும்.' என்ற கொள்கை கொண்டவர். இத்தகைய சிறந்த எழுத்தாளரின் கதைகளில் வரும் கதாப்பாத்திரங்கள் வழி, இந்தச் சமூகத்திற்கு அவர் கூறவரும் கருத்துக்கள் இங்கு ஆராயப்படுகிறது. பொதுவாக கதை மாந்தர்கள் என்பவர்கள் கதையாசிரியரின் கற்பனை படைப்பே ஆகும். ஆயினும் கதையாசிரியர் மனதில் தேங்கிக்கிடக்கும் இந்தச் சமூகத்தின் மீதான எதிர்பார்ப்புகளை கதை மாந்தர்களின் வழியே அவர் வெளிப்படுத்த விரும்புகிறார். அந்த வகையில் கண்மணி குணசேகரன் தன்மனதில் தேங்கிக்கிடக்கும் சமூகத்தின் நிலையை கதைக்கருவாகக் கொண்டு, கருத்தை வாசகர்களுக்கும் மக்களும் கொண்டுபோய் சேர்த்துள்ளார் என்றே கருதலாம். அந்த வகையில் கண்மணி குணசேகரன் கதைகள் சிலவற்றை எடுத்துக்கொண்டு இங்கு ஆராயப்படுகின்றது.

**முன்னுரை**

இலக்கியப் படைப்பாளனுக்குச் சமூகம் பற்றிய அகன்ற அறிவு இன்றியமையாததாகிறது. அனுபவித்தவற்றின் அடிப்படையில் அமையும் நிகழ்ச்சிகளும் பாத்திரங்களும் படைப்புக்கு உயிரோட்டம் தருகின்றன. சிறுகதை மிகச்சிறந்த இடத்தைப் பெறவேண்டுமெனில் கதைத் திட்டத்துடன் கதைமாந்தர்களும் சிறப்பாக அமைய வேண்டும். படைப்பாளர் தனது ஆழ்ந்த மன உணர்வுகளையோ, குறிப்பிட்ட சமுதாயத்தின் நிலையினையோ தனது சொற்களின் வழி விளக்க இயலாத பொழுது, தனது உணர்வுகளைக் கதாப்பாத்திரங்களின் வழியே வெளிப்படுத்தச் செய்வார். அந்த வகையில் ஆசிரியர் கண்மணி குணசேகரன் ஆழமான கதைக்கருவை அமைத்து அதனைக் கதைமாந்தர்களின் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும் அவரது புதினத்தில் ஆசிரியர் பேசுவதுபோல் இல்லாமல் கதைமாந்தர்களே நேரில் பேசுவது போன்ற உணர்வு ஏற்படுகிறது. இத்தகைய சிறப்பு மிக்க இவரது படைப்பு களில் காணப்படும் கதைக்கரு குறித்தும், கதை மாந்தர்களின் வழி உணர்த்தப்படும் கருத்துக்கள் குறித்தும் ஆராய முற்படுகிறது.

### ஆய்வு நோக்கம்

மனிதவாழ்க்கை என்பது பல நிகழ்வுகளின் தொகுப்பாகும். மனித உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். பொருளா தரத்தில் பின் தங்கிய மனிதர்கள் வாழ்வு மிகவும் கேலிகூத்துகளுக்கு உரியதாகவும், அவர்களின் மொழி, செயல்பாடுகள் நகைப் பிற்குரியதாகவும் மற்றவர்களால் பார்க்கப் படுகிறது. உறவுகளுக்குள் இருக்கும் வேறு பாடுகள், குறைகூறுதல், பொறாமைப்படுதல், தெருசண்டை இடுதல், குழந்தையின்மை, வறுமை, மறுமணம், கள்ளகாதல், குழந்தை இன்மை, ஏளனம், எள்ளி நகையாடுதல், அன்பு, பாசம் என பல உட்கூறுகளை உள்ளடக்கியதாகும். அத்தகைய கூறுகளை யெல்லாம் ஆசிரியர்எவ்வாறு தம் கதைகளில் கையாண்டுள்ளார், அது கதைகளில் எவ்வாறு கருவாக்கப்பட்டு கதை அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது என்பனவற்றை கண்மணி குணசேகரன் கதைகளில் பகுத்தராய்வதே இந்த ஆய்வு நோக்கமாகக் கொண்டுள்ளது.

### முதன்மைச் சொற்கள்

கதைக்கரு, கணவன் - மனைவி, குடும்ப உறவுகள், ஊர்காரர், பால் நரம்பு, தப்புக் கொட்டை, குழந்தை இன்மை, மறுமணம், மருதாணி வாசம், வட்டார வழக்குகள்.

### ஆய்வு முறை

இந்த ஆய்வில் கண்மணி குணசேகரனின் நான்கு சிறுகதை நூல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு விளக்கமுறை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### கதைக்கரு

கதைக்கரு என்பது புதினத்தின் மைய அம்சமாகும். அது வீரியமும், உயிர்த்துடிப்பும் கொண்டதாய் இருக்கவேண்டும். புதினத்தின் சிறப்பிற்குக் கதைக்கருவே வலுசேர்ப்பதாக வும் மூலக் காரணமாகவும் அமைகிறது. எனவே படைப்பாளன் தேர்வு செய்யும் கதைக்கரு புதிய அம்சம் கொண்டதாயிருக்க வேண்டும். கதைக்கரு மற்றவர்களுக்கு எளிமையாக புரியும்படி அமைதல் வேண்டும். அவை மக்களின் நம்பிக்கையைப் பெறும்படி அமைதல் வேண்டும். சமுதாயத் தேவை களைச் சுட்டிக்காட்டும்படி இருத்தல் வேண்டும். வாழ்க்கையின் நன்மையை, அறத்தினை வலியுறுத்த வேண்டும். சில நேரங்களில் கதைக்கரு பொழுதுபோக்கு நிலையைத்தாண்டி மக்களுக்குப் பயன்படும் வகையில் அமைதல் வேண்டும். வாசகரின் எண்ணத்தை நிறைவு செய்வதாக இருக்க வேண்டும். கதையில் தனித்தன்மை பெற்றதை விளக்குவதாகவும் கதைக்கரு அமையவேண்டும்.

### கதைக்கருவும் படைப்பு உருவாக்கமும்

படைப்பாளனின் ஊடுருவும் திறனால் கதைக் கரு உருவாக்கப்படுகிறது. உணர்ச்சி, சிந்தனைகளின் அடிப்படையில் கரு உருவாதல் வேண்டும். உண்மை நிலை, கற்பனை நிகழ்வுகள், இவற்றில் ஏதேனும் ஒன்றினைக் கொண்டு, சமூகத்திற்கும் பயன் பட வேண்டும். கதைக்கருவில் இலட்சிய நோக்கு வெளிப்படல் வேண்டும்.

படைப்பாளன் ஒரு படைப்பை உருவாக்கு வதற்கு முன்பு அவர் மனதில் கதைப் பற்றிய உணர்வு குடிகொள்கிறது. அவ்வுணர்வு சமுதாயத்தில் அன்றாடம் நிகழ்வுகளில் இருந்து தனக்கான கருவைத் தேர்ந்தெடுக்கிறது. மா.இராமலிங்கம் "கதைக் கருதான் படைப்பாளனின் மனதில் முதன் முதலாக இடம் பெருகிறது. ஏனென்றால் கதைப் பொருளுக்கு உருவம் கொடுக்கும் போதே கதைப்பின்னல், பாத்திரங்கள், பின்னணியில் ஏற்படுகின்றன என்பர்."[1] கதைக்கான கருவைச் சரியாகத் தேர்வு செய்யாவிட்டால் கதை அமைப்பும்,பொருள் நோக்கும் சரியாக அமையாது. "கருப்பொருள் இல்லாவிடில் கதைப் போக்கின்றி கிடக்கும். கதை நிகழ்ச்சிகள் எவ்வாறு சொல்ல வேண்டும், கதைமாந்தருடைய பண்புகளுக்கு எவ்வாறு அழுத்தம் தரவேண்டும்,எத்தகைய கூற்று முறையினைப் பயன்படுத்த வேண்டும், எவற்றைச் சொல்லலாம், எவற்றை விட்டு விடலாம் என்பதை எல்லாம் ஆசிரியன் முடிவு கட்டுவதற்கு கருப்பொருளே உதவுகிறது"[2] என்று க.ரத்தினம் குறிப்பிடுவர். படைப்பாள னின் படைப்புத் திறனுக்கு எத்தகைய சிறு நிகழ்வும் கதைக்கருவாகலாம். இரா.தண்டாயு தம் "கதைக்கான கருப்பொருளுக்காகத் தெருத்தெருவாக ஊர்ஊராகச் சுற்ற வேண்டும் என்பதில்லை. கதைப் பொருளைப்

பார்கின்ற பார்வை மட்டும் இருந்தால் ஒருவன் தன்னிலேயே நூற்றுக்கணக்கான கதைகளுக்கான கருப்பொருள்களை எளிதாக பார்க்கமுடியும்"[3] என்று குறிப்பிடுவர். இத்தகைய சிறப்புமிக்க கதைக் கருவை வைரமுத்து இயல்பாக வாழ்வியல் கண்ணோட்டத்தில் அமைத்திருக்கிறார்.

கதைக்கரு பல நிலைகளில் கதைகளில் இடம் பெறுகின்றது. அந்த வகையில் கண்மணி குணசேகரன் கதைகளில் சமூகம் சார்ந்த கருத்தாடல்களும், உளவியல் சார்ந்த எண்ண ஓட்டங்களும், ஒருகுறிப்பிட்ட வட்டாரத்தைச் சார்ந்த வழக்காறுகளும், சமூகச் சிக்கல்களும், கதைக்கருக்களாக அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

**கதைக்கருவும் கதைமாந்தர்களும்**

கதைக்கருவைச் சார்ந்தே கதைமாந்தர்கள் அமைக்கப்படுகின்றனர். எனவே கதைக்கரு அடிப்படையானது. படைப்பாளன் உள்ளத்தே தோன்றிய அல்லது உள்ளத்தைத் தாக்கியக் கருத்து. அடக்கமுடியாமல் காண்பன, கேட்பன, உறுவனவற்றையெல்லாம் பல்கிப் பெருகிப் பொங்கிப் பரந்து ஆற்றலுடன் ஆழத்துடன் பின் வெளிவருவது. விதையிலி ருந்து மரம் தோன்றியதைக் காட்டுவது எளிது. அந்த மரத்தையே விதையினுள் அடக்கிக் காட்டமுடியுமா? முடியும். அந்த வித்தகரே படைப்பாளன். புதினத்தை நிகழ்ச்சி களாக்கி, நிகழ்ச்சிகளைக் கதைமாந்தர்க ளாக்கி, கதைமாந்தர்களைக் கதைக்கருவாக் கிக் காட்டுதல் வேண்டும் என்பதாகும்.

எனவே கதைக்கரு - கதைமாந்தர் வழி கதை நிகழ்ச்சிகள் உருவாகின்றன. அந்த நிகழ்ச்சிகளின் அமைப்பே கதைப்பின்னல் ஆகும். கதைக்கருவும் கதைமாந்தரும் ஊடும் பாவும் போல் அமைய உதவுவது இந்தக் கதைப்பின்னலே. கதைக்கருவுக்கு உயிரோட்டம் தருவனக் கதைமாந்தர்களே ஆகும். கதைமாந்தர் சிலர் படிப்படியே வளர்ச்சியுற்று முழுமைப்பெறுவர். இவர்களை முழுநிலை மாந்தர்என்பர். இது போன்று துணை நிலைமாந்தர், சிறுமாந்தர்கள் என பலநிலையில் குறிப்பிடுவர்.

இவ்வாறு சிறுகதைகளில் கதைக்கருவைச் சார்ந்தே கதைமாந்தர்கள் அமைக்கப் படுகின்றன. இவ்வாறு அமைக்கப்படும் போது கதாப்பாத்திரங்களின் படைப்பு மையக்கருவை விலகிச் செல்வதில்லை. அதே போன்று சங்கிலித் தொடர் போல மாந்தர்களும் ஒருமாந்தருக்கு ஒருமாந்தர் தொடர்பு கொண்டே அமைக்கப்படுகின்றனர். அதுவே கதையின் தொடர்பாகும். அதுவே கதையின் வெற்றிக்கும்,வாசகனின் மகிழ்ச்சிக்கும் வழி வகுக்கிறது என்றே கூறலாம்.

**கண்மணி குணசேகரன் சிறுகதைகள்**

- பால் நரம்பு
- தப்பு கொட்டை
- வாசம்
- வாடாமல்லி
- அம்போகம்

ஆகிய சிறுகதைகள் இங்கு ஆராயப் படுகின்றன.

**1. பால் நரம்பு**

பால் நரம்பு என்ற சிறுகதையில் சோலைச்சி என்ற கதாபாத்திரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஆசிரியர் கண்மணி குணசேகரன் சோலைச்சி என்ற கதாபாத்திரம் மூலம் குழந்தை இல்லாத பெண்கள் படும் அவல நிலைமைகளை சித்தரித்துக் காட்டுகின்றார். ஒரு பெண் தாய்மை எனும் நிலையினை அடையாவிட்டால் இந்தச் சமூகம் எப்படி எல்லாம் அவளை காயப்படுத்துகிறது, அவள் உணர்வுகளை எந்த அளவிற்கு நசுக்குகின் றது என்பதை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.

சோலைச்சிவாசலில் குந்தியபடி உள்ளே பால் கொடுத்து கொண்டிருக்கும் சின்ன வளைப்பார்க்கின்றாள். விரிக்க பார்த்துவிட்டு ஏக்கமாய் தலைகுனிந்து கொண்டாள். இதனைக் கண்ட சின்னவள் "சனியன் பார்க்கிற பார்வையில் பால் அரும்பே அருந்துவிடும் போலிருக்கு"[5]என்று முனங்கி கொண்டே இவளுக்கு முதுகு புறம் காட்டி திரும்பிக் கொண்டாள். இதனைக் கண்ட சோலைச்சிமிகுந்த மன உளைச்சலுக்கு ஆளானாள். குழந்தையின்மையினால் பெண் கள் அடையும் மனவேதனையை சோலைச்சி என்ற கதை மாந்தர் மூலம் ஆசிரியர் படம் பிடித்து காட்டியுள்ளார்.

இந்த சமூகத்தில் ஒரு பெண் தன்னால் தாய்மை அடைய முடியவில்லை என்றால் தன் கணவனுக்கு மறுமணம் செய்து வைக்கும் புரட்சிகரமான சிந்தனையை முன்வைக்கிறார் ஆசிரியர். அந்தபுரட்சியை சோலைச்சி என்ற கதாபாத்திரம் செய்து காட்டுகின்றார். ஆசிரியர் பால் நரம்பு

என்னும் சிறுகதையில் சோலைச்சி தன் கணவனுக்கு மறுமணம் செய்து வைப்பதால் அவள் தன் குடும்பத்தாரிடம் அனுபவிக்கும் இன்னல்களையும், வாங்கும் அவப்பெயர்களையும் கண்மணி குணசேகரன் மிக எதார்த்தமாக பதிவு செய்துள்ளார். அந்த வகையில் "நீ ஒன்னும் பிள்ளை எல்லாம் தூக்க வேண்டாம். உன்கிட்ட இருக்கிற இரும்பலும் அதுக்கு தொத்தி விட வேணாம் போ. சோலைச்சி கையைபிடித்து தள்ளினாள் சின்னவள். அண்ணம்தண்ணி இல்லாமல் இரும்பிநெஞ்சு வலிகொண்டு தலைசுற்றலில் குந்தி இருந்த சோலைச்சி அவள் தள்ளியதில் நிலை தடுமாறி பின்பக்கம் சாய்ந்து விட்டாள். விடியற்காலம் எழுந்தவள் அங்குமிங்கும் மிரண்டு பார்த்தவளாய் முகம் மாறிவிட்டது. எல்லோரையும் மிரண்டு பார்த்து சொன்னால் எங்கே என் புள்ளே? எங்கே என் புள்ளே? என்று இல்லையே, எனக்கு புள்ள இல்லயே என சிரித்தால், அழுதாள். உடம்பு சரியில்லாமல் தெம்பற்றி இருந்ததில் பின் மண்டை அடிபட்டதில் மண்டை குழம்பி விட்டது"[6] இதன்மூலம் தாய்மை அடைய முடியாத ஒருபெண் அவள் அடையும் சித்திர வதையும், மனவேதனையையும் மிக நேர்த்தியாக சிறுகதை மூலம் ஆசிரியர் பதிவுசெய்துள்ளார்.

**2. தப்புக் கொட்டை**

தப்பு கொட்டை சிறுகதையின் முதன்மை கதாபாத்திரம் மூக்காயிஆவாள். மூக்காயிக்கு மூன்று மகன்கள்ஆவர்.

**சந்திரகாசி - அவள் மனைவிருக்கு**

**நடுமகன் - அவள் மனைவி - வெள்ளச்சி**

**சின்னவன் – அவள்காதலி - செல்வி**

மூக்காயி தன்பிள்ளையின் மீது வைத்திருந்த ஆழமான நம்பிக்கையின் தன்மையை ஆசிரியர் தப்புக்கொட்டை என்ற சிறுகதை மூலம் வெளிக்கட்டுகிறார். அந்த ஆழமான நம்பிக்கையும் தாயிடம் உடையும் போது ஏற்படும் மனதாக்கத்தையும் இக்கதையில் கூறுகின்றார்.

தப்பு கொட்டை கதையின் மூலம் மக்கள் தங்கள் விளைநிலங்களில் விளையும் பொருட்களின் அளவுகளைச் சரி பார்ப்பதற்காக விளைந்த பொருட்கள் மீது வேப்பிலை போன்றவற்றை வைத்து அளவு பார்க்கப்பட்ட வரலாற்று நிகழ்வை இந்தக் கதையில் பதிவு செய்கின்றார்.

தப்புக்கொட்டை சிறுகதையில் தாயின் நம்பிக்கைக்குரிய மகன்களாக விளங்கியவன் மூன்றாவது மகன் கோதண்டராமன் கதா பாத்திரம். நம்பிக்கைகுரிய மகன் தாயின் பேச்சுக்கு மாறாக நடந்து கொண்டதால் குடும்பம் அடையக்கூடிய அவல நிலையினையும் ஆசிரியர் மிக உணர்ச்சி பூர்வமாக கூறியுள்ளார். கிராமப்புறங்களில் இரு குடும்பங்களுக்கு இடையே ஏற்படும் வகையறா பகையினால் ஒரு உயிரினைக் கொள்ளும் அளவிற்கு பகைமை உணர்வு மேலோங்கி இருப்பதை இக்கதையின் மூலம் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். இக்கதை ஒரு தாயின் மூன்று பிள்ளைகள் மீதான எதிர்பார்ப்பு ஏமாற்றத்தை தந்தால் அவள் மனம் உடைந்து போவதாகக் காட்டப் படுகின்றது. காலங்காலமாக காதலுக்குப் பெற்றோர்கள் எதிர்ப்பினை தெரிவித்த செய்தி இன்றளவும் இருக்கின்றன என்ற இயல்பான நிலையை எடுத்துக்காட்டியுள்ளார்.

**3. வாசம்**

வாசம் எனும் சிறுகதையில் முதன்மையான கதாபாத்திரம் மருதாணி ஆவார். மருதாணி வாசத்தின் மேல் மிகுந்த விருப்பம் கொண்டவன் இவன். பண்ணை வீட்டில் மாடு மேய்க்கும் வேலையை செய்து வருகிறான். பட்டறிவு இல்லாத ஒரு ஆன்மகன். அவன் தன் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள அவன் சந்திக்கும் அவலங்களையும் இடையூறுகளையும் ஆசிரியர்கள் வெளிப் படுத்தி உள்ளார் இக்கதையில். வளர்ந்த ஒருவனுக்கு மருதாணி மீதான ஆசை பற்றி வித்தியாசமான பார்வையில் வாசம் எனும் சிறுகதையில் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளார். பெண்மைக்கு இணையாக ஒரு ஆண் மருதாணி வாசம் மீது கொண்டுள்ள ஆசைகளை உணர்வுகளையும் கற்பனையாக வெளிக்காட்டி உள்ளார் வாசம் என்னும் சிறுகதையில்.

**4. வாடாமல்லி**

முதன்மை கதாபாத்திரம் மல்லிகா - கணவன் பன்னீர்செல்வம், வாடாமல்லி கதையில் மல்லிகா-சக்கரவர்த்தி ஆகிய இருவரின் காதல் கதையைப் பற்றி ஆசிரியர் மிக உணர்ச்சிபூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார். சிறுவயதில் மல்லிகாவிற்கும் சக்கரவத்திக்கும் இடையேயான காதல் என்பது ஏக்கமும், தவிப்பும், ஏமாற்றமும் நிறைந்ததாகவே காட்டப்படுகின்றது. இவர்கள் காதல் வாழ்க்கையில் தன் காதலன் சக்கரவர்த்தி

ஒரு முழு நேரக் குடிகாரனாக இருந்த போதிலும் அவன் மீது மல்லிகாவுக்கு அளவு கடந்த அன்பும் நம்பிக்கையும் இருந்து வந்து. ஊரார் பார்வையில் சக்கரவர்த்தி ஒரு குடிகாரனாகவும், போக்கிரி பையனாகவும் இருந்தாலும் மல்லிகாவின் மனதில் அவன் என்றும் நடத்தை தவறாதவனாக நம்பிக்கைக்கு கூறியவனாகவே இருந்தான். மல்லிகாவின் காதல் கைக்கூடவில்லை என்றாலும் மல்லிகாவின் மனதில் சக்கரவத்தின் மீது கொண்ட காதல் அவள் மனதில் என்றும் நிலைத்து காலம்கடந்தும் இருந்தது. இக்கதையில் மல்லிகாவின் கதாபாத்திரத்தை ஆசிரியர் மிக உயர்ந்த கதாப்பாத்திரமாகப் படைத்துக்காட்டியுள்ளார். மல்லிகா வேறு ஒரு ஆண்மகனைத் திருமணம் செய்து கொண்டு வாழ்க்கையை வாழ்ந்த போதிலும், தன் கணவன் குடும்பம் மீது அன்பையும் தன் கடமையும் வெளிப் படுத்தும் குணம் கொண்டவளாக வாழ்ந்து வந்தாள். இந்த நிலையில் மல்லிகாவின் வாழ்வில் தன் முன்னாள் காதலன் இறந்த செய்தியினை கேட்டவுடன் தன் மனம் அடைந்த துயரினை வெளிப்படையாகக் காட்ட முடியாமல் தான் அனுபவித்த வலியினையும் அவ்வலியானது தன் குடும்பத்தை பாதிக்காதவாறும் அவள் கையாண்ட சூழலையும் ஆசிரியர் மிக உணர்வு பூர்வமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். பன்னீர்செல்வத்திற்கு தன் மனைவியின் காதல் பற்றி அனைத்து உண்மைகளையும் அறிந்த பின் தன் மனைவியின் மனக்குமுறல் களையும் முழுமையாக உணர்ந்தவனாகவும், புரிந்தவனாகவும் அவன் நடந்து கொண்ட விதம் அவனின் மன முதிர்ச்சி நிலையை வெளிப்படுத்துவதாக இருந்தது. அத்தகையை அவனின் நேர்மைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவள் மல்லிகா. மல்லிகா தன் மண வாழ்க்கையில் எந்த விதத்திலும் குறை இல்லாமல் இரண்டு பிள்ளைகளுக்கும் தாயாகி குடும்பத்தை கண்ணும்கருத்துமாய் நடத்திக் கொண்டிருந்தாள். இவளின் செயலால் அவன் உண்மை அறிந்த போதிலும் முன்பை விட தன் மனைவின் மீது அவனுக்கு மிக பிரியமும் மதிப்பும் வந்தது. மல்லிகா சக்கரவர்த்தியின் இறுதி சடங்கிற்குத் தன் வீட்டில் இருந்து கிளம்பும் பொழுது தன்னை மனரீதியாக கட்டுப்படுத்திக் கொண்டு அதனை கணவனுக்கும் மற்றவர் களுக்கும் காட்டிக்கொள்ளாமல் சென்ற செயல், மல்லிகாவின் கதாப்பாத்திரம் மனதில் நிற்கும்படி செய்துள்ளது. தன் காதலனின் இறப்பிற்குச் சென்றது திருமணத்திற்குப் பிறகு மல்லிகா சென்ற முதல் பயணமாகும். சக்கரவர்த்தி இறந்து கிடக்கும் இடத்திற்கு அவள் நெருங்கும் பொழுது அவர் மணமானது கனவுலகத்தில் மிதப்பது போன்று அவளுக்கு தெரிந்தது. தன்னை எதிர்த்து வரும் பெற்றோரையும் சக்கரவர்த்தி மனைவியையும் ஊரானையும் யாரையும் ஏறெடுத்துப் பார்க்காமல் சக்கரவர்த்திக்கு மாலையைப் போட்டு விட்டு ஜடமாக நின்றாள்.

முதல் காதல் எப்போதும் மனதை விட்டு நீங்காது என்பதை ஆசிரியர் வெளிப் படுத்துகின்றார். கடல்கடந்து சென்றாலும், கல்யாணம் ஆணாலும் முதல் காதலுக்கு மனம் ஏங்கிக்கொண்டுதான் இருக்கும் என்ற உள்ளத்தின் நிலையை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

**5. அம்போகம்**

காசிலிங்கம், சூரியகாந்தி, வெங்கடேசன், தொப்பிலி, செல்வி, செல்வராசு ஆகியோர் கதை மாந்தர்க. கணவன் மனைவி உறவில் ஏற்படும் பிரிவினை மையமாகக் கொண்டு இக்கதை அமைந்ததால் என்று இசிறுகதைக்கு பெயர் சூட்டி உள்ளார் ஆசிரியர்.

நீ கதையின் முதன்மை கதாப்பாத்திரம் காசிலிங்கம் இவன் கூத்துப்பட்டறையில் எடுபுடி வேலை செய்யும் ஒரு நபராக நீண்ட காலமாக வெங்கடேசவாத்தியாரிடம் வேலை செய்து வருகிறான். காசிலிங்கத்திற்கும் சூரிய காந்திக்கும் திருமணம் நடைபெறுகிறது. இவனுக்கு இவள் இரண்டாம்தாரம். பார்ப்பதற்கு இவள் கிளி போன்ற அழகினை உடையவள். இவன் சற்று சுமாராகத்தான் இருப்பான். இவர்களுக்கிடையே எந்த ஒரு சமூக உறவும் இல்லை. சூரியகாந்தி விருப்பம் இல்லாமல் திருமணம் செய்து கொண்டதால் சூரியகாந்திக்கு வேறு ஒரு மீது விருப்பம் ஏற்பட காரணம். இதனாலே வழிதவறி செல்கிறாள். இதனால் மனமுடைந்து ஊராரின் அவச்சொல்லுக்கு ஆளாகி தன்மானத்தையும் மரியாதையும் இழந்து வாழ்ந்து வருகிறான். இந்நிலையில் இவர்களுடைய பிரிவானது 15 ஆண்டுக ளைக் கடந்து செல்கிறது. இருந்த போதிலும் காசிலிங்கத்தின் மனதில் சூரியகாந்தி மீதான பாசம் என்பது துளிகூடம் குறையவில்லை என்பதாகக் கதையில் காட்டப்படுகிறது.

இருவரின் உறவு மீண்டும் இணையும் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டிருந்தான் காசிநாதன். அவ்வாறு காத்துக் கொண்டிருந் தவனுக்கு ஏமாற்றம் மட்டுமே கிடைத்தது. மறுபுறம் சூரியகாந்திதாயின் தந்தையும் இழந்த காரணத்தால் அவள் வயிற்று பிழைப்பிற்கு சிரமப்பட்டுவந்தாள். இந்த நிலையில் அவளின் ஊரார் நான்கு பேர் வெங்கடேசவாத்தியாரை அணுகி காசிநாதன் உங்க கூத்து பட்டறையில் வேலை செய்த பையன் அவனுக்கும் சூரியகாந்திக்கும் இடையே விவாகரத்துப் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிக் கொண்டு வந்து வணிகரிடம் கொடுத்து விட்டால் மணிமேகலைக்கு அரசு தரக்கூடிய அனாதை பணம் கிடைக்கும் என்று நடிகர் சொன்ன தால் அந்தப்பத்திரத்தில் கையெழுத்து வாங்க காசிநாதன் வீட்டிற்கு ஊர் பெரியவர்கள் வந்தனர். இதனைப் பார்த்து காசியில் இருந்ததற்கு அதிர்ச்சியாக இருந்தது காரணம் சூரியகாந்தி உடன் இணைந்து வாழலாம் என்று நம்பிக்கை இருந்தவனுக்கு இது பேர் அதிர்ச்சியாகவே அமைந்தது. நிலைகுலைந்து போனாள் கண்கள் இருண்டு நெருப்பில் நிற்பது மாதிரி நின்றான் சூரியகாந்தி வைத்து விட்டு போயிருந்த புடவையின் மடிப்புக்குள் நாலு பவுன் தங்கச்சங்கிலிகையில் எடுத்து அவள் மேனியை தடவுவது போல வருட விடுகிறான். தோளில் போட்டு வளைத்துக் கொண்டு சத்தம் இல்லாமல் உடைந்து அழுகிறான் வெகுநேரம் கழித்து தானே தெளிந்து கண்களை துடைத்துக் கொண்டு வெளியே வந்தவன் விரித்து வைத்திருந்த தாலியின் மீது சங்கிலியை போட்டான். இதனைக் கண்டதும் வந்த பெரியவர்கள் இதெல்லாம் வேணாம், அந்த புள்ள சாமாசெட் நகைநட்டு இதெல்லாம் கேக்க லைங்க வெறும் கையெழுத்து மட்டும் தான் கேட்டாள் என்று சொன்னார்கள். பாயில் கிடந்த பேனாவை திறந்து நடுக்கல் கையெழுத்தில் பெயரை போட்டான். அவனை யும் மீறி நாலு ஐந்து சொட்டுக்கள் தாளில் விழுந்தனர். அதே சமயம் எறவாணத்திலி ருந்து சிட்டுக் குருவிகள் பளிச் சென்று வெளியே பறந்து ஓடி போயினர்” இவ்வாறு கதை முடிகின்றது.

இக்கதையில் காசிலிங்கம் தனது மனைவிக் குரிய பணத்தையும் நகையையும் உரியவ ளுக்கு பிரித்து கொடுத்து அனுப்புகின்றான். இக்கதையில் காசிலிங்கம் ஒரு சிறந்த படைப்பாகக் காட்டப்படுகிறது.

**நிரைவாக**

ஆசிரியர் கண்மணி குணசேகரன் கதைக்கருவை சமுதாயத்திலிருந்தே எடுத்துள்ளார். தான் அனுபவித்த, பார்த்த நிகழ்வுகளை உணர்ச்சி பொங்க கதையாக்கி யுள்ளார். கேலி கிண்டல் இல்லாமல் கதைக்கு முக்கியத்துவம் அளித்து கதையோட்டத்தை அமைத்துள்ளார். அவரின் சில கதைகள் படிக்கும் போதே கண்ணீர் வரவைக்கும் அளவிற்கு கதையின் பாங்கு அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. இதனால் ஆசிரியர் சமுதாயத்தில் வாசகரின் மனதில் உயர்ந்து நின்று நிலைத்துவிட்டார் என்பதையே உணரமுடிகிறது. சிறு சிறுகதை களைக் காவியம் போல படைத்துக் காட்டியுள்ள திறன் அவருக்கே உரியதாகத் தோன்றுவதைக் காணமுடிகிறது.

**அடிக்குறிப்புகள்**

1. இராமலிங்கம்.மா, தமிழ் நாவல் இலக்கியம், பக்.12
2. தண்டாயுதம்.இரா, பாரதி முதல் சுஜாதா வரை, பக்.32
3. தீபா.பாஇ வைரமுத்து சிறுகதைகளில் கதைக்கரு, பக்.102
4. சௌரிராஜன்.பொன், இந்திய இலக்கியச் சிற்பிகள்,
5. மு.வரதராசன், சாகித்திய அகாதெமி, டெல்லி, 2013. பக்.53
6. கண்மணி குணசேகரன், பால் நரம்பு, பக்.12
7. மேலது, பக்.12

**பார்வைநூல்கள்**

1. இராமலிங்கம்.மா, தமிழ் நாவல் இலக்கியம்,சென்னை -1995
2. கண்மணி குணசேகரன், ஆதண்டள் கோயில் குதிரை தமிழினி பதிப்பகம், சென்னை- 51, 2019
3. மேலது, வாடாமல்லி, தமிழினி பதிப்பகம், சென்னை- 51, 2019 (இரண்டாம் பதிப்பு)